செ.வெ.எண்:05/2018 நாள்:05.02.2018

**சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று, மனுக்கள் மீது தீர்வுகாணும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கினார்.

பிரதி மாதம் முதல் திங்கட்கிழமை நடைபெறும் மாற்றுத் திறனாளிகள் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாற்றுத் திறனாளிகள் இருக்கும் இடத்திற்கே நேரடியாகச் சென்று அவர்களிடம் மனுக்களைப் பெற்று மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்களிடம் கோரிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். இன்றைய சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 51 மனுக்கள் மாற்றுத் திறனாளிகளிடம் இருந்து பெறப்பட்டது. மேலும், தமிழ்பாண்டி என்ற மாற்றுத் திறனாளி பெண் அளித்த மனுவின் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டு, பழகுநர் ஓட்டுநர் உரிமம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனைப் பட்டா, விபத்து நிவாரணம் கோருதல், பசுமை வீடு கேட்டல், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித் தொகை கோருதல், வங்கிக் கடன், மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித் தொகை மற்றும் உபகரணங்கள் கேட்டல், குடும்ப அட்டை கோருதல், இலவச தையல் இயந்திரம் வழங்கக் கேட்டல், ஆக்கிரமிப்பு அகற்ற கேட்டல், பட்டா வழங்கக் கேட்டல், மின் இணைப்பு தொடர்பாக மனுக்கள், பயிர் காப்பீடு வழங்கக் கேட்டல் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் போன்ற 278 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன. முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் மனுக்கள் மற்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது விரைவில் தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.து.இளங்கோ, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, தேவகோட்டை சார் ஆட்சியர் திருமதி.ஆஷா அஜீத்,இ.ஆ.ப., சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி மற்றும் அனைத்துத் துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.